# உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன். ஏசாயா 1 : 25

**நான் என் கைகளை உன்னிடமாய் திருப்பி,**
**உன் களிம்பு நீங்க,உன்னைச் சுத்தமாய் புடமிட்டு, உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

இந்த மாதம் கர்த்தர் தன்னுடைய கையை உன்னிடமாய் திருப்பி, உன் களிம்பு நீங்க உன்னை சுத்தமாய் புடமிட்டு, உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன் என்று வாக்களிக்கிறார். ஈயம், களிம்பு போகவேண்டுமானால், கர்த்தர் தன்னுடைய கையை உன்னிடமாய் திருப்பி, உன்னை சுத்தமாய் புடமிடவேண்டும். கர்த்தர் கை திருப்புவதும், புடமிடுதும் ஆரம்பத்தில் ஒரு கசப்பான அனுபவமாகவே இருக்கும். ஆனால், முடிவிலோ ஒரு இனிப்பாக அனுபவமாக மாறும்.

**எபிரெயர் 12 : 11 கூறுகிறது,**

எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய் காணாமல் துக்கமாய் காஸம். ஆகிலும், பிற்காலத்தில், அதில் பழகினவர்களுக்கு, அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே,

இந்த மாதம் கர்த்தர் தன் கையை உன் பக்கம் திரும்பும் போது ஒருவேளை உனக்கு வேதனையாக இருக்கலாம், புடமிடும் போது கசப்பாக இருக்கலாம். ஆனாலும், முடிவு நீதியாகிய சமாதானத்தின் பலனைத் தரும். சமாதானப் பலனை எதிர்பார்த்து தேவனைத் துதியுங்கள்.

**எபிரெயர் 12 : 5 கூறுகிறது,** அன்றியும் என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே. அவரால் கடிந்து கொள்ளப்படும் போது சோர்ந்து போகாதே.

கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார், என்று பிள்ளைகளுக்கு சொல்லுகிறதுபோல, உங்களுக்கு சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்.

நீங்கள் சிட்சையை சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களை புத்திரராய் எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்கு கிடையாதிருந்தால், நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்கள்.

அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மை சிட்சிக்கும்போது அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாக்களுக்கு வெகு அதிகமாய், அடங்கியிருக்க வேண்டுமல்லவா ?

அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி, கொஞ்சகாலம் சிட்சித்தார்கள். இவரோ, தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட்சிக்கிறார்.

ஆம் பிரியமானவர்களே,

பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட்சிக்கிறார் – என்ற வசனத்தை நினைத்துக்கொள்ளுங்கள். ஆம் நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட்சிக்கிறார்.

கர்த்தருடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்மை சிட்சிக்கிறார்.

ஏனெனில், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிப்பது இல்லையே – வேதம் கூறுகிறது, இயேசு கூறுகிறார் . . நான் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்கள் பரிசுத்தராயிருங்கள் – என்பதாக.

ஆம், கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

நம்முடைய தேவன் பரிசுத்தத்தை விரும்புகிற தேவன், தம்மைப் போலவே, நாம் மாறவேண்டுமென விரும்புகிறார். ஆதலால் தான் நம்மிடம் காணப்படுகிற ஈயம், களிம்பு போக வேண்டுமென விரும்பி, தன்னுடைய கையை நம் பக்கமாக திருப்புகிறார். தேவனைத் துதிப்போமா ?

**கீழ்க்கண்டவாறு உங்களுடைய விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்**

**கர்த்தர் என் ஈயத்தையெல்லாம் நீக்குவார் – என்பதாக.**

அடிக்கடி சொல்லுங்கள், மீண்டுமாக சொல்லுங்கள். விசுவாசத்தோடு சொல்லுங்கள்.

**பக்தன் யோபு கூறுகிறார், யோபு 42 : 10 கூறுகிறது,**

அவர் என்னை சோதித்த பின்பு, நான் பொன்னாக விளங்குவேன். ஆம்,
யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாக அவனுக்குத் தந்தருளினார்.

**சகரியா 9 : 12 கூறுகிறது,**

இரட்டிப்பான நன்மையைத் தருவேன் – என்பதாக, அல்லேலூயா!
இரட்டிப்பான நன்மையை பெற்றுக்கொள்ளும்படியாக உன் ஈயத்தையெல்லாம் நீக்கும்படியாக, கண்ணீரோடு, உன்னை ஒப்புக் கொடுப்பாயா ? **உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன் – ஆமென்.**